


**12. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தேச கட்டமைப்பின் முதுகெலும்பாக மகளிர் திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டு தொ◌ிவித்துள்ளார்.

2. வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து 650 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

3. டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 134 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரி மாணாக்கர் சேர்க்கை தொடர்பாக விரைவில் அறிவிக்கப்படும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் கூறியுள்ளார்.

5. மகளிர் உலககோப்பை 20-20 கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் இன்று கோலாகலமாக தொடங்குகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் பல்வேறு துறைகளில் மகளிரின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டு தொ◌ிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 12 ஆண்டுகால ஆட்சியில் அனைத்து துறைகளிலும் பெண்கள் மேம்பட தமது தலைமையிலான அரசு அயராது உழைத்ததாகவும் எடுத்துரைத்தார்.

நிதி உள்ளடக்கம் தொடங்கி தொழில்முனைவோர் வரை அனைத்து துறைகளிலும் மகளிர் தனி முத்திரைபதித்து இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்வி, சுகாதாரம், தூய்மை, விளையாட்டு, வீட்டு நிர்வாகம், அறிவியல், ஆட்சிமுறை உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் பெண்கள், பரவலாக, சிறப்பாக செயலாற்றி வருவதாக அவர் கூறினார்.

ட்ரோன் தொழில்நுட்பம் போன்ற வளர்ந்து வரும் துறைகளில் மகளிரின் பங்கு அதிகரித்து வருவது புதிய வாய்ப்புகளை உருவாக்குவதோடு, நாட்டின் வளர்ச்சிப் பாதையை முன்னெடுத்து செல்வதாக தொிவித்துள்ளார்.

மகளிரின் நிதி ஆளுமையை உறுதி செய்யும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு மத்திய அரசு முழுவீச்சில் ஆதரவு அளித்து வருவதாக கூறிய பிரதமர், மகளிர் தங்களது முழு திறமையையும் உணர்ந்து தேச கட்டமைப்பிற்கு வலுவாக பங்காற்றும் வகையில் வேலைவாய்ப்புகளையும், ஆளுமையையும், அவர்களது மாண்பையும் மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

விண்வெளி, படைப்பாற்றல் திறன், புதுமையான சிந்தனைகள், அறிவியல் துறைகளிலும் பெண்கள் உத்வேகத்துடன் செயலாற்றுவதாக பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

தேச கட்டமைப்பில் மகளிர் நாட்டின் முதுகெலும்பாக திகழ்கிறார்கள் என கூறிய அவர், தன்னிகரற்ற திறமைகளாலும், அனைத்து தளங்களிலும் மகளிர் எழுச்சியுடன் செயலாற்றி பாரத தாய்க்கு பெருமை சேர்ப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

இந்நிலையில் பிரதமரின் தூய்மை இந்தியா, ஜல்ஜீவன் திட்டங்கள் போன்றவை மகளிருக்கு முன்னேற்றத்தை அளித்துள்ளதாக திருச்சி கிராமாலயா நிறுவனர் திரு.தாமோதரன் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரல்ஹாத் ஜோஷி

வெங்காயத்திற்கான குறைந்தபட்ச உத்தரவாத கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து 650 ரூபாயாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் உணவு பொதுவிநியோகத் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தொிவித்துள்ளார்.

வெங்காயத்தின் கொள்முதலை வலுப்படுத்தி, விவசாயிகளின் வருவாயை பெருக்கும் வகையில் இத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், மண்டி விலை நிலவரங்கள் மற்றும் பதப்படுத்திய வெங்காயத்தின் தரத்திற்கு ஏற்பவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாக தமது சமூக வலைதளப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப கொள்முதலை முன்னெடுத்துச் செல்லும் வகையில் விலை நிர்ணயம் செய்யப்படுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் 132 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டு வரும் குடியரசு தலைவர் பூங்காவின் கட்டுமானப் பணிகளை இன்று நேரில் ஆய்வு செய்கிறார்.

அங்குள்ள ராணுவப் பயிற்சி நிறுவனத்தில் நடைபெறும் அணிவகுப்பு நிகழ்ச்சியில் நாளை அவர் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஒலிபரப்பு அமைச்சகம்

தொலைக்காட்சி, வானொலி தொடர்பான சேவைகள் மற்றும் பொது விவாதங்களுக்கான வரைவு தொலைத்தொடர்பு விதிகளை மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

தொலைத்தொடர்பு சட்டம் 2023 கட்டமைப்பிற்கு உட்பட்டும், 1885-ம் ஆண்டு தந்தி சட்டத்திற்கு உட்பட்டும் இந்த புதிய வரைவு விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் 2 நாள் பயணமாக இன்று ஸ்விட்சர்லாந்து செல்கிறார்.

அந்நாட்டு அதிபர் Guy parmelin ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து முக்கிய பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஈர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து அந்நாட்டு முன்னணி தொழில் நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கலந்துரையாடுகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடி அரசு நிகழ்ச்சிகள் தொடங்குவது தொடர்பாக பதிலளிக்க மத்திய மாநில அரசுகளுக்கு சென்னை உயர்நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவின் மீது விசாரணை மேற்கொண்ட தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி அருள்முருகன் அடங்கிய அமர்வு 8 வாரங்களில் இதற்கான பதிலளிக்க ஆணை பிறப்பித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

நீட்

MBBS இளநிலை மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவுத்தேர்வு எழுதுவதற்கான நேரம் 195 நிமிடங்களாக அதிகரித்து தேசிய தேர்வு முகமை அறிவிப்பு வெளியிட்டுள்ளது

இதன்படி வரும் 21-ம் தேதி நடைபெறும் நீட் மறு நுழைவு தேர்வு பிற்பகல் 2 மணிமுதல் மாலை ஐந்தேகால் மணி வரை நடைபெறும் என்று தொிவிக்கப்பட்டுள்ளது.

பதிவேடுகளில் கையெழுத்து மற்றும் பிற நிர்வாக பணிகளுக்காக இந்த கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டு உள்ளதாக தேர்வு முகமை கூறியுள்ளது.

மாணவ மாணவிகளுக்கு தேர்வு முறை உகந்ததாகவும், வசதியாகவும் இருப்பதை உறுதி செய்யும் வகையில் இந்நடவடிக்கை என்றும் தேசிய தேர்வு முகமை தொிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 134 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. விஜய் இன்று அறிவித்துள்ளார்.

மேட்டூர் அணை இன்று திறக்கப்படாத நிலையில் வடிமுனை குழாய் கிணறுகளைக் கொண்டு குறுவை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க இந்நடவடிக்கை என்று கூறியுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் நீர் மேலாண்மை மேம்படுத்தப்பட்டு தரமான விதைகள் நெல் சாகுபடி, உற்பத்தி அதிகரிக்கப்பட்டு மாநிலத்தின் உணவு பாதுகாப்பை வலுப்படுத்த வழிகோலப்படும் என்றார்.

டெல்டா மாவட்டங்களில் 2 ஆயிரத்து 325 கிலோ மீட்டர் நீளமுள்ள C மற்றும் D வாய்க்கால்களை தூர்வாரவும்,

போதிய அளவில் உரங்களை இருப்பு வைக்கவும்,

தினமும் தடையற்ற மும்முனை மின்சாரம் 18 மணி நேரம் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதனிடையே தமிழக விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு மேட்டூர் அணையை திறக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தி.மு.க. வலியுறுத்தி உள்ளது.

மேட்டூர் அணையை திறந்து கடைமடைப்பகுதி வரை தண்ணீர் சென்றடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

விஸ்வநாதன்

தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரி மாணாக்கர் சேர்க்கை தொடர்பாக விரைவில் அறிவிக்கப்படும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் கூறியுள்ளார்.

கடலூரில் இன்று செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், நீட் மறு நுழைவுத்தேர்வு நடைபெறவுள்ள நிலையில் மாணாக்கர் சேர்க்கை குறித்து அதிகாரிகள் ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம்

குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற குழந்தை தொழிலாளர் ஒழிப்பு முறை குறித்த விழிப்புணர்வு கூட்டத்தில் உரையாற்றிய மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. முகமது பர்வேஷ் குழந்தை தொழிலாளர் இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ரமேஷ்

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தலைமையில் பல்வேறு துறைகளில் வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக இன்று ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

K. A. செங்கோட்டையன்

தமிழ்நாட்டில் இணையவழி பட்டா மாறுதல், தானியங்கி பட்டா மாறுதல் தொடர்பாக மாநில வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. K. A. செங்கோட்டையன் சென்னை தலைமை செயலகத்தில் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஆதவ் அர்ஜுனா

தமிழ்நாடு முழுவதும் 47 புதிய விளையாட்டு விடுதிகள் அமைக்கப்பட உள்ளதாக மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தொ◌ிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அரங்கில் அடிப்படை வசதிகள் குறித்து இன்று நேரில் ஆய்வு செய்த அவர், விடுதியில் தங்கிப்பயிலும் விளையாட்டு வீரர்களுக்கு 10 நாட்களுக்கு ஒருமுறை உடற்பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றும் தொ◌ிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மணிமுத்தாறு அருவி

நெல்லை மணிமுத்தாறு அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலா பயணிகள் குளிக்க 8-வது நாளாக இன்றும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தொ◌ிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

விருதுநகர்

விருதுநகர் மாவட்டத்தில், அரசு பள்ளி மாணவிகள், 1330-வது குறளிலிருந்து, முதலாவது திருக்குறள் வரை 15 மணி நேரத்தில் தலைகீழ் வரிசையில் எழுதி சாதனை படைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

மகளிர் உலககோப்பை 20-20 கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் இன்று கோலாகலமாக தொடங்குகிறது.

இன்றைய முதல் போட்டியில் இங்கிலாந்து, இலங்கை அணிகள் மோதுகின்றன.

நாளைமறுநாள் நடைபெறும் போட்டியில் இந்தியா - பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖